வருட காலமாகி விட்டது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இது பற்றி கனம் அமைச்சர் அவர்களுக்கு கிராமத்திலிருந்து போக்குவரத்துக்கு மிகவும் இடைஞ்சலாக இருக்கிறது என்று புகாரும், பஸ் போவதற்கு முடியாத நிலைமையில் இருக்கிறது என்று தந்தி மூலமும் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து சீக்கிரமாக இந்த வருஷத்திலேயே அதைச் செய்வதற்கு அரசாங்கம் உத்திரவு இடுமா?

கனம் திரு. வி. ராமைய்யா : பஸ்கள் ஓடக்கூடிய ரோடுகள் தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பது எனக்குத் தெரியும். இன்னும் நாம் எல்லா ரோடுகளுக்கும் 'ப்ளு மெடல்' போட்டு பூர்த்தி செய்து விட வில்லை. அதனாலேயே வருஷத்திற்கு எத்தனை மைல் எடுத்துக்கொள்வது என்று ஒரு அடிப்படை வைத்துக் கொண்டிருக்கிறோம். நீலகிரி மாவட்டத்திற்கு விசேஷ சலுகை காட்டப்பட்டு வருகிறது. அந்தக் காரணத்தினாலே தான் இந்த மீதம் இருக்கக்கூடிய பகுதி இந்த வருஷத்திலே பூர்த்தியாகிவிடும் என்று மீண்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்?

திரு. டி. கர்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்து யூனியனுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கிராமப்புற ரோடுகளுக்கு ரூரல் ஓர்க்ஸ் கிராண்டிலிருந்து தார் ரோடு போடக்கூடாது என்று அரசாங்கம் தடை விதித்துள்ளது கனம் அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. வி. ராமைய்யா : அதற்கு தனியாக கேள்வி வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Are the recommendations of the District Development Council regarding the classification of the roads taken into account by the Government?

THE HON. SRI V. RAMAIAH : Normally, their recommendations are considered.

Office of Superintending Engineer (Projects) (Tiruchirappalli)

* 74 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Works be pleased to state the reasons for shifting the office of the Superintending Engineer (Projects) from Tiruchirappalli to Tirunelveli?

THE HON. SRI V. RAMAIAH : The Tiruchirappalli Circle, as it was in 1959, was having eight divisions under its control. It was considered too heavy for a Superintending Engineer to have effective supervision and control. Hence, in 1960, the Government sanctioned the bifurcation of the regular Tiruchirappalli Circle by the formation of a new circle with headquarters at Tirunelveli. However, before the new circle was formed, it was observed that there was not sufficient work in the Projects Circle, Tiruchirappalli, because, out of the three schemes, namely, Kattalai High Level Canal Scheme, Pullambadi Canal Scheme and the Neyyar Irrigation Scheme dealt with in the Projects Circle—the first two schemes had almost been completed and the last one had reached an advanced stage in execution. Therefore, the Projects Circle was

4th July 1962]

abolished and the remaining work of the Projects Circle was attached to the newly formed circle at Tirunelveli, especially on account of the fact that the bulk of the remaining work relating to the Neyyar Irrigation Scheme was in Tirunelveli Circle. It will, therefore, be seen that the Projects Circle was abolished and there was no question of shifting its headquarters from Tiruchirappalli to Tirunelveli.

Periyar-Idiki Project (Report)

* 78 Q.—SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Works be pleased to state whether the Government have received any report on the Periyar-Idiki Project and if so, the action taken thereon?

THE HON. SRI V. RAMAIAH: The Government have not received the report on the Periyar-Idiki Project. A communication on the subject is awaited from the Government of India.

திரு. கே. மூக்கையா தேவர்: இந்தத் திட்டம் பற்றி ஏதாவது ஆராயப்பட்டதா?

கனம் திரு. வி. ராமைய்யா: மத்திய அரசாங்கம் ஆராய்ந்து கொண்டுதான் இருக்கிறது.

திரு. கே. மூக்கையா தேவர்: நமது அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு எந்த விதத்திலேனும் சொல்லி, இதை நல்ல முறையிலே நிறைவேற்றுவதற்கு காரணத்தைக் காட்டி இருக்கிறார்களா?

கனம் திரு. வி. ராமைய்யா: இதில் சம்பந்தப்பட்ட நதிகள் நமது மாகாணத்திலே ஒரு பகுதியில் ஓடக்கூடிய காரணத்தினால், எந்த ஒரு திட்டமும் ஆராய்ச்சி செய்து நிறைவேற்றுவதற்கு முன்பு மத்திய அரசாங்கத்திலுள்ள பிளானிங் கமிஷன் நமது அரசாங்கத்தின் அபிப்பிராயம் தெரிந்துதான் முடிவு செய்து கொண்டிருக்கிறார்கள். இப்போது அதற்கு வேண்டிய பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள். விரைவிலே அவர்களுடைய முடிவு நமக்குத் தெரியும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: இடிக்கி ஆறுத் திட்டம் என்பது இன்டர்-ஸ்டேட் ரிவர் என்பது உண்மையா? இந்த இடிக்கி ஆறு தண்ணீரை நமது மாகாணத்திற்கு உபயோகப்படுத்தினால், மூன்று போகத்திற்கு வேண்டிய தண்ணீர் கிடைப்பதுடன், மின்சாரம் கிடைப்பதற்கும் வசதியாக இருக்குமாகையால், இதை மேற்குப் பகுதியில், திருப்பினால், மழைகாலத்திலே அந்தத் தண்ணீர் மிகவும் பிரயோஜனப்படும் என்று நம்புகிறேன். ஆகவே, இதனை மத்திய அரசாங்கத்திலே கனம் முதல் மந்திரி அவர்கள் தனக்குள்ள செல்வாக்கை உபயோகப்படுத்தி, நமது மாகாணத்தில் இப்படி திருப்பிவிடுவதற்கான முயற்சி எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்?

கனம் திரு. வி. ராமைய்யா: மத்திய அரசாங்கத்திற்கு நமது அபிப்பிராயத்தை எடுத்துச் சொல்லி இருக்கிறோம். அவர்கள் அதை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.